

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று முன்தினம் (26.12.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக ஜமுனாமரத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மலைவாழ் மக்களுக்காக இருசக்கர அவசர கால ஊர்தியினை கொடியசைத்து பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், குழும இயக்குநர், தேசிய நலவாழ்வு குழுமம் திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் மரு. அருண்தம்புராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை (திருவண்ணாமலை), எம்.எஸ்.தரணிவேந்தன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), ஒ.ஜோதி (செய்யாறு), மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கடலூர் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், டிச. 28-

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க வழக்கறிஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது என வேளாண்மை -உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் வழிகாட்டுதல்படியும், துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின்



அறிவுறுத்தலின்படியும், கழக சட்டத்துறை செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ அவர்களின் அறிவிப்பின் படி, வருகின்ற 30.12.2024, திங்கட்கிழமை, காலை 10.00 மணி அளவில், கடலூர் ஹோட்டல் ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல் அரங்கத்தில், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞரணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் மத்திய மண்டல பொறுப்பாளர் சூர்யா வெற்றிகொண்டான் அவர்களும், தலைமை கழக வழக்கறிஞர் மூ.தினேஷ்குமார் அவர்களும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர். ஆகவே கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட மாநகர தி.மு.க. வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் நீதிமன்ற வழக்கறிஞர் நிர்வாகிகள் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக சட்டத்துறையின் சார்பாக வருகின்ற 18.1.2025 அன்று நடைபெறும் வழக்கறிஞர்கள் அணி 3வது மாநாடு சம்பந்தமாக, கழக பணிகள்.

இவ்வாறு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

## வடலூரில் கழக ஆதிதிராவிடர் நலக்குழு

# மாவட்ட - மாநகர நிர்வாகிகள் ஆலோசனை - ஆய்வுக் கூட்டம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கடலூர், டிச. 28-

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு கடலூர் கிழக்கு, மேற்கு திருவண்ணாமலை வடக்கு, தெற்கு விழுப்புரம் வடக்கு, தெற்கு கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மயிலாடுதுறை நாகை திருவாரூர் ஆகிய மாவட்ட மற்றும் கடலூர், தஞ்சாவூர் ஆகிய மாநகர நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது என ஆதிதிராவிடர்நலகுழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு கடலூர் கிழக்கு, மேற்கு திருவண்ணாமலை வடக்கு, தெற்கு விழுப்புரம் வடக்கு, தெற்கு கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மயிலாடுதுறை நாகை திருவாரூர் ஆகிய மாவட்ட மற்றும் கடலூர், தஞ்சாவூர் ஆகிய மாநகர நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் நாளை (29.12.2024 - ஞாயிற்றுக்கிழமை), மாலை 3.00 மணி அளவில் வடலூர், சென்னை கும்பகோணம் சாலையில் உள்ள மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில், எனது (ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.) தலைமையில் வேளாண்மைத் துறை அமைச்சரும் கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சரும், திருவண்ணா மலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான எ.வ.வேலு, தொழிலாளர் நலத்துறை அமைச்சரும் கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளருமான சி.வெ.கணேசன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் பி.செல்வராஜ், எம்.பி., ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரும்

ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைத் தலைவருமான மா.மதி வேந்தன் மற்றும் ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்கள் மருதூர் ஏ.ராமலிங்கம், முன்னாள் எம்.எல்.ஏ., வி.பி.இராஜன், முன்னாள் எம்.எல்.ஏ., திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைச் செயலாளர்கள் பா.துரை சாமி, மு.பொன்தோஸ், சி.தசரதன், மு.பரமானந்தன், அரூர் சா. இராசேந்திரன் , மாரியப்பன் கென்னடி ஆகியோர் முன்னிலையில் -

திருவண்ணாமலை வடக்கு மாவட்டச் செயலாளர் தரணிவேந்தன், எம்பி., விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தா.உதயசூரி யன், எம்.எல்.ஏ., கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் வசந்தகார்த்திகேயன் எம்.எல்.ஏ., தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.கல்யாணசுந்தரம், எம்.பி., தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், எம்.எல்.ஏ., தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை, எம்.எல்.ஏ., மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன், எம்.எல்.ஏ., நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன், திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன், எம்.எல்.ஏ., மற்றும் கழக முன்னணியினர் சிறப்புரை யாற்றிட, ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., வரவேற்புரையாற்றிட நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் திருவண்ணாமலை வடக்கு, தெற்கு விழுப்புரம் வடக்கு, தெற்கு கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு கடலூர் கிழக்கு, மேற்கு தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மயிலாடுதுறை நாகை திருவாரூர் ஆகிய மாவட்ட மற்றும் கடலூர், தஞ்சாவூர் மாநகர ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இக்கூட்டத்திற்கு வரும்போது தங்கள் அமைப்பின் நடவடிக்கை குறிப் பேட்டினை (மினிட் புத்தகம்) தவறாது கொண்டு வரவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் பழைய மாநகராட்சி அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நலத்துறை சார்பில் மானியத்துடன் மகளிருக்கு ஆட்டோ மற்றும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம், தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மேயர் க.சரவணன், கும்பகோணம் மாநகரச் செயலாளர் துணை மேயர் சு.ப.தமிழழகன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சிங்கப்பூரில் மூன்றாம் நாள் பயணத்தைத் தொடங்கும் முன் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியுடன் மாணவ, மாணவிகள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டதோடு, கல்வி, தொழிற்நுட்பம் சார்ந்த கலந்துரையாடலை மேற்கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 8 – இல் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கு வரும் 28.12.2024 அன்று சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 28.12.2024 சனிக்கிழமை | காலை 9.00 மணி | 8 | இராமநாதபுரம் | கிங் பேலஸ், பழைய செக் போஸ்ட், ராமேஸ்வரம் பிரதான சாலை, பட்டினம்காத்தான், இராமநாதபுரம். |
| | மாலை 4.00 மணி | | திருவாடானை | குட்லு மஹால், டி.டி.பிரதான சாலை, ஆர்.எஸ்.மங்கலம், திருவாடானை. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 26-12-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 51 நினைவு நாளை முன்னிட்டு, அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில், அய்யாவின் திருவுருவப் படத்திற்கு அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர், சி.வெ.கணேசன் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். இதில் க.சொ.க.கண்ணன் எம்.எல்.ஏ., மு.கணேசன், சி.சந்திரசேகரன், தனசேகர், இரா.கென்னடி,இரா. மணிமாறன், மா.அன்பழகன், கோ.அறிவழகன், ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், இரா.முருகேசன், கே.சி.லூயிகதிரவன், ஆதி.இளங்கோவன், செல்வம், குலோத்துங்கன், ரவிகுமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக தோழர்கள் பங்கேற்றனர்.

## நாமக்கல் புதிய புறவழிச்சாலையில் ரூ. 70 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்

# ரயில்வே பாலத்திற்கு தென்னக ரயில்வே தொழில்நுட்ப அனுமதி!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தகவல்!

நாமக்கல் டிச. 28 -

நாமக்கல் புதிய பைபாஸ் ரோட்டில் ரூ. 70 கோடி மதிப்பில் ரயில்வே மேம்பாலம் அமைப்பதற்காக, மத்திய ரயில்வே அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது. வருகிற 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் முதலைபட்டி முதல் திருச்சி ரோடு வரை 3 கட்ட பைபாஸ் பணிகள் நிறைவு பெறும் என நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்



போது அவர் பேசுகையில்,

நாமக்கல் நகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க, சேலம் ரோட்டில் உள்ள முதலைப்பட்டியில் இருந்து, சேந்தமங்கலம் ரோடு, துறையூர் ரோடு, திருச்சி ரோடு, மோகனூர் ரோடு வழியாக வள்ளிபுரம் அருகே சேலம் கரூர் தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் புறவழிச் சாலை எனும், புதிய பைபாஸ் ரோடு அமைக்கும் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்.

இந்த பணிகள், 3 கட்டங்களாக நடைபெற்று வருகிறது. ஏற்கனவே சேலம் ரோட்டில் முதலைப்பட்டியில் இருந்து புதிய பஸ் ஸ்டாண்டு வரை முதல் கட்டப்பணிகள் முடிவடைந்து, புதிய பஸ் ஸ்டாண்டு செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

தற்போது புதிய பஸ் ஸ்டாண்டில் இருந்து, சேந்தமங்கம் ரோட்டில் உள்ள வேட்டாம்பாடி வரை 2 ம் கட்ட பணியும், சேந்தமங்கலம் ரோட்டில் இருந்த திருச்சி ரோட்டில் புதுப்பட்டி வரை 3ம் கட்டப் பணியும் வேகமாக நடைபெற்று வருகிறது.

2ம் கட்டத்தில் மரூர்ப்பட்டி அருகில் ரயில் பாதை அமைந்துள்ளது. அந்த இடத்தில் ரயில்வே மேம்பாலம் அமைக்க அனுமதி அளிக்க வேண்டும் என மத்திய ரயில்வே வாரியத் தலைவரை டெல்லியில் சந்தித்து கோரிக்கை விடுத்தார்.

தற்போது மத்திய ரயில்வே அமைச்சகம் அதற்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளது. சுமார் 1 கி.மீ தூரம் உள்ள ரயில்வே மேம்பாலப் பணிகள் ரூ. 70 கோடி மதிப்பீட்டில், மாநில நெடுஞ்சாலைத்துறை மூலம் விரைவில் மேற்கொள்ளப்படும். இந்த பணியும், 2, 3ம் கட்ட பைபாஸ் ரோடு பணியும், அடுத்த 2025 ஆம் ஆண்டிற்கு முடிவடைந்து விடும். அதைத் தொடர்ந்து சேலத்தில் இருந்து திருச்சி, துறையூர் செல்லும் வாகனங்கள் நாமக்கல் நகருக்குள் செல்லாமல் புதிய பைபாஸ் ரோடு வழியாக செல்ல முடியும் என தெரிவித்துள்ளார். இப்பேட்டியின் போது நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி துணை மேயர் எஸ்.பூபதி, நாமக்கல் தெற்கு நகரக் கழகச் செயலாளர் ராணா ஆனந்த் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



செஞ்சி ஒன்றியம் வஸ்தரம்புரவடை கிராமத்தில் ரூ 32.80லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 2 புதியு கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை முதலமைச்சர் காணொலி மூலம் திறந்து வைத்ததை அடுத்து பள்ளியில் நடைபெற்ற விழாவில் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ பள்ளி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளார்.